DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF PROCEDURE)

IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | |
|---|---|
| Name | சஞ்சீவி |
| Father's Name | கண்ணாளன் |
| Village | திருப்பத்தூர் |
| Taluk | திருப்பத்தூர் |
| Calling | வழக்கறிஞர் |
| Age | 66 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **19.08.2025**

**O.S. No.112 /2017 பி.வா.சா.1**

**குறுக்கு விசாரணை (வாதி தரப்பு):-**

1. நான் எத்தனை வருடமாக வழக்கறிஞராக தொழில் செய்து வருகிறேன் என்றால் கடந்த 30 வருடமாக செய்து வருகிறேன். இவ்வழக்கில் நான் 1ம் பிரதிவாதி என்றும் எனது மனைவி 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். 3 மற்றும் 4ம் பிரதிவாதிகள் மல்லப்பள்ளி கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கின் சர்வே எண்.111/1D-ல் அத்துமீறி நுழைந்து பாதை அமைக்க முயற்சி செய்ததை தடுக்க கோரியும், வாதிகளின் அமைதியான சுவாதீனத்தை இடையூறு செய்யாமல் இருக்க நிரந்தர தடையுறுத்துக்கட்டளை

பிறப்பிக்க கோரியும் இவ்வழக்கை வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான், ஆனால் பொய்யான சங்கதிகளை கூறி தாக்கல் செய்துள்ளார்கள்.

2. சர்வே எண்.111/1D–க்கு தெற்கு பக்கத்தில் தான் எனக்கு சொந்தமான நிலம் உள்ளது என்றால் சரியல்ல, வண்டிவழிக்கு தெற்கு பக்கம் தான் என்னுடைய நிலம் உள்ளது. மேற்படியான காணைவழி வடக்கு தெற்காக அமைந்துள்ளது என்றால் சரிதான். வண்டி வழியும் காணைவழியும் ஒன்றாகத்தான் அமைந்துள்ளது என்றால் சரிதான், வண்டி வழிக்கு மேற்கு புறமாகத்தான் காணை வழி உள்ளது. மேற்படியான காணைவழியானது ஊர்மக்கள் அனைவரும் பொதுவாக பயன்படுத்தக்கூடிய வழி என்றால் சரிதான். வண்டி வழி என்பது எனக்காக தனியாக பாத்தியப்பட்ட வழி என்றால் சரிதான்.

3. மேற்படி காணை வழிக்கு மேற்கு புறம் தான் சர்வே எண்.111/1D நிலம் அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படியான சர்வே எண்.111/1D–ஆனது வழக்கின் 1ம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கானது திருப்பத்தூர் கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.82/2017 ஆக பதிவு செய்யப்பட்டு பின்பு இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு முன்பாக இவ்வழக்கின் வாதிகள் மீது அ.வ.எண்.15/2010 ஒன்றை திருப்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான், வாதிகள் மற்றும் அவர்களது உறவினர்கள் உட்பட.

4. மேற்படி வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு அவ்வழக்கு சொத்தை பார்வையிட்டு ஆணையர்அறிக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்படியான வழக்கில் இவ்வழக்கின் வாதிகள் மற்றும் அவர்களது உறவினர்களுக்கு எதிராக வண்டி வழி சம்மந்தமாக விளம்புகை பரிகாரம் மற்றும் தடையுறுத்துக்கட்டளை கோரி தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கின் சொத்து விவரத்தில் உட்பிரிவு குறிப்பிடாமல் பொதுவான சர்வே எண்.110 மற்றும் 111–ல் வண்டி வழி அமைந்துள்ளது என தாக்கல் செய்திருந்தது என்றால் சரிதான்.

5. மேற்படி இரண்டு சர்வே எண்களிலும் பல்வேறு உட்பிரிவுகள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் மேற்படி எந்தெந்த சர்வே எண் வழியாக வண்டி வழி செல்கிறது என விரிவாக குறிப்பிட்டிருந்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் தீரப்பையும், தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கையும் நான் ஏற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் தற்போது வரை நான் எந்தவொரு மேல்முறையீடும் செய்யவில்லை என்றால் சரிதான், செய்ய வேண்டிய அவசியம் இல்லை. மேற்படி வழக்கானது 05.02.2015–ல் தீர்ப்பானது என்றால் சரிதான்.

6. இவ்வழக்கின் வழக்கு சொத்தான சர்வே எண்.111/1D நான் எவ்வித உரிமையும் கோரவில்லை என்றால் சரிதான். அதேபோல் சர்வே எண்.111/1D வண்டிவழியும் கோரவில்லை என்றால் சரிதான். மேற்படியான சர்வே எண்.111/1D–ல் நான் வண்டிவழி அமைக்க முற்பட்டதனால் தான் இவ்வழக்கை தாக்கல் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது என்றால்

சரியல்ல. மேற்படி அவ்வாறு வண்டி வழி அமைக்க முயற்சி செய்ததால் தான் நாட்றம்பள்ளி காவல் நிலையத்தில் வாதிகள் புகார் அளிக்க நேரிட்டது என்றால் சரியல்ல, அது பொய்யான புகார்.

7. மேற்படி அ.வ.எண.15/2010 வழக்கில் அவ்வழக்கின் 4ம் பிரதிவாதியான இவ்வழக்கின் 1ம் வாதியின் நிலத்தில் எவ்வித உரிமையும் கோரயியலாது மற்றும் வழிப்பாத்தியமும் கோர இயலாது என்று நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள வண்டி வழி வாதிகள் எவ்வித இடையூறும் செய்யவில்லை என்றால் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு பிறகு வழியை சேதப்படுத்தினார்கள், அதனால் நாங்கள் நீதிமன்ற அவமதிப்பு தொடுத்துவிடுவோம் என்ற அச்சத்தில் இவ்வழக்கு எங்கள் மீது தாக்கல் செய்துவிட்டார்கள்.

8. மேற்படி வழியை எந்த தேதியில் சேதப்படுத்தினார்கள் என்றும் நீதிமன்ற அவமதிப்பு செய்துவிட்டீர்கள் என்றும் அறிவிப்பு ஏதும் கொடுத்தேனா என்றால் இல்லை. மேற்படி நீதிமன்ற அவமதிப்பு செய்தவிட்டார்கள் என்று இதுவரை நீதிமன்றத்தில் மனு ஏதேனும் செய்துள்ளேனா என்றால் இல்லை.

9. எனக்கு பாத்தியப்படாத, உரிமையில்லாத, ஏற்கனவே நீதிமன்றத்தால் அ.வ.எண்.15/2010–ல் தீர்மாணிக்கப்பட்ட முடிவுக்கு எதிராக நான் நடந்துகொண்டதால் தான் இவ்வழக்கு தொடரப்பட்டது என்றால் சரியல்ல.

எனவே வாதிகள் கோரியப்படி இவ்வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| ***ESHWAR VISWANATHAN*** | *DISTRICT MUNSIF* <br> *Digitally signed by ESHWAR VISWANATHAN* |

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**வாணியம்பாடி.**